ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2131/20 - 2019 ජූලි මස 09 වැනි අඟහරුවාදා - 2019.07.09

*2131/20 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்***

57 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப மின்வலு மற்றும் சக்தி வலு மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இலங்கை மின்சார சபைக்குத் தேவைப்படுவதும் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதுமான காணியின் உத்தேசிக்கப்பட்டுள்ள சுவீகரிப்புக்கு இக் கட்டளையின் மூலம் அங்கீகாரம் வழங்குகின்றேன்.*

ரவி கருணாநாயக்க,
மின்வலு, சக்திவலு மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்.

*2019, யூன் 27.*

1A - G 30483 — 27 (2019/07)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*இலங்கையில் தென் மாகாணம், மாத்தறை நிருவாக மாவட்டத்தில் பிடபெத்தர பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 262ஏ, வெளிவ கிராம அலுவலர் பிரிவில் வெளிவ கிராமத்தில் அமைந்துள்ள மொரவக கோரளையில் அரச அதிகாரம்பெற்ற அளவையாளரால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 1065 மற்றும் 2019.05.14 ஆந் திகதியையுடைய திட்டத்தில் காணித்துண்டு இலக்கம் (1) மற்றும் (2) என அடையாளம் இடப்பட்டுள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள எல்லையுடன் 25.5 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய காணி :-*

**காணித்துண்டு இலக்கம் - 01**

வடக்கு : *பிரதேச செயலகப் பாதை, இத்திட்டத்தின் காணித்துண்டு இலக்கம் 2 என பயன்படுத்தப்பட்ட காணி மற்றும் ஜீ. ஏ. பிரியங்கர என்பவருக்குச் சொந்தமான இக்காணி மற்றும் பிரதான காணியின் மிகுதிப் பகுதி ;*
கிழக்கு : *ஜீ. ஏ. பிரியங்கர என்பவருக்குச் சொந்தமான இக்காணி மற்றும் பிரதான காணியின் மிகுதிப் பகுதி ;*
தெற்கு : *வரம்பு ;*
மேற்கு : *வரம்பு.*

*உரிமை கோருபவர் : ஜீ. ஏ. பிரியங்கர*

**காணித்துண்டு இலக்கம் - 02**

வடக்கு : *பிரதேச செயலகப் பாதை மற்றும் ஜீ. ஏ. பிரியங்கர என்பவருக்குச் சொந்தமான இக்காணி மற்றும் பிரதான காணியின் மிகுதிப் பகுதி ;*
கிழக்கு : *ஜீ. ஏ. பிரியங்கர என்பவருக்குச் சொந்தமான இக்காணி மற்றும் பிரதான காணியின் மிகுதிப் பகுதி ;*
தெற்கு : *இத்திட்டத்தின் காணித்துண்டு இலக்கம் 1 என பயன்படுத்தப்பட்ட காணி ;*
மேற்கு : *பிரதேச செயலகப் பாதை.*

*உரிமை கோருபவர் : ஜீ. ஏ. பிரியங்கர*

*07-785*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.